IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT, UDHAGAMANDALAM) SESSIONS JUDGE OF THE NILGIRIS AT UDHAGAMANDALAM.

| | |
|---|---|
| Sessions | Spl.SC.No. 58/2022 |
| | Prosecution |
| Deposition of witness for | LW 3, PW 4 |
| Name | திலகவதி. |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Mobile No. | |
| Email I.D | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 12th day of December 2024.

**12.12.2024.**

**எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் குவிமுசு பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து நீதிமன்றத்தால் மனு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை:—**

**நான் தற்சமயம் சேலத்தில் குடியிருக்கிறேன். நான் இந்த வழக்கு சமயத்தில் பந்தலூர் மேங்கோ ரேஞ்சில் குடியிருந்தேன். எனது கணவர்**

இறந்து விட்டார்., எனக்கு மொத்தம் 8 குழந்தைகள், அதில் 5 பெண்மக்கள், 3 ஆண் மக்கள். இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுமி எனது 7 மகள் ஆவார். வழங்கு சமயத்தில் பந்தலூர் மேல் நிலையப்பள்ளியில் 11 ஆம் வகுப்பு படித்து வந்தார். எனது மகள் தலைக்கு குளிக்கவில்லை என்று 5 மாதமாக தெரியவில்லை. என்னிடம் இது சம்பந்தமாக மறைத்துவிட்டார். அதன் பின்னர் எனது மகளை விசாரித்த போது. இந்த வழக்கில் எதிரி சுதாகரன் எனது மகளுக்கு சாப்பாடு கொடுத்துள்ளார், அவர் கொடுத்த சாப்பாடு தட்டை திருப்பி கொடுக்க சென்ற போது சுதாகர் என் மகளிடம் தவறாக நடந்துள்ளார். இவ்வாறு 3 முறை தவறாக நடந்து எனது மகள் கர்ப்பம் உற்றுள்ளார். என் மகளை மிரட்டி உடலுறவு கொள்ளவில்லை என்றால் உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரையும் கொண்றுவிடுவதாக மிரட்டி உள்ளார். பால்வாடியில் இருந்து வந்து பரிசோதித்த போது என் மகள் கர்ப்பம் உற்றுள்ளது தெரிந்து கொண்டு அவர்கள் ஜைல்ட் லைன் எண்க்கு தொடர்பு கொண்டு புகார் கொடுத்துள்ளனர். பின்னர், ஜைல்ட் லைனில் இருந்து வந்து என்னையும் என் மகளையும் விசாரித்தார்கள். பின்னர், எங்கள் இருவரையும் அழைத்து சென்று தேவாலா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**(இன்று நீதிமன்றத்தில் எதிரி ஆஜர் ஆகவில்லை. சாட்சி எதிரியை பார்த்தால் அடையாளம் காட்டுவதாக தெரிவித்தார். எதிரி சுதாகரின் புகைப்படத்தை காட்டிய போது சாட்சி இவர் தான் என் மகளை பாலியல் வன் தாக்குதலுக்கு உள்ளாக்கியதாக தெரிவித்தார்.)**

**<u>எதிரிதரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

எதிரியும் நானும் ஒரே தேயிலை தோட்டத்தில் பணி செய்கிறோம் என்று சொன்னால் நான் தோட்டத்தில் வேலை செய்கிறேன். அவர் அலுவலகத்தில் பணி செய்கிறார். எனக்கும் அவருக்கும் சண்டை, மன கசப்பு இருந்தததது என்றால் இல்லை. எனது மகள் கர்ப்பமுற்று உள்ளார் என்பது எனக்கு எப்போது தெரியும் என்றால் கர்ப்பமுற்று 5 மாதத்திற்கு பின் தான் எனக்கு தெரியும். ஜைல்ட் லைன் குழந்தைகள் நல உதவியாளர்கள் எந்த தேதியில் எங்களை விசாரித்தார்கள் என்று கேட்டால் 29.04.2022 அன்று என்னை விசாரித்தார். ஜைல்ட் லைனில் இருந்து என்னை விசாரித்த நபரின் பெயர் எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் நான் நேரடியாக புகார் கொடுக்கவில்லை ஜைல்ட் லைன் குழந்தைகள் நல உதவியாளர்கள் புகார் கொடுத்தார்கள். நான் நேரடியாக சென்றிருந்தால் புகார் கொடுத்திருக்க கூடும் நான் காவல் நிலையம் செல்லவில்லை என்று சொன்னாலும் அதனால் தான் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னாலும் அது சரிஅல்ல. ஜைல் லைன் உறுப்பினர்கள் தான் கூட்டி சென்றார்கள் அவர்கள் தான் புகார் கொடுத்தர்கள். ஜைல்ட் லைன் உறுப்பினர்கள் காவல் நிலையம் சென்ற விவரம் என்னுடைய வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். எதிரிக்கும் எனது மகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னாலும், வழக்கில் சொல்லி உள்ள படி எதிரி புகார் எதுவும் செய்யவலில்லை என்று சொன்னாலும், வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னாலும், எதிரி மீது பொய்யாக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னாலும் அது சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>**

**இல்லை.**

Sd/- Thilagavathi/

Typed down to my dictation, in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/ Thiru. M. Senthil Kumar/
Sessions Judge,
Magalir Neethimandram,
(FTMC), Udhagamandalam.